REVISED திருத்தப்பட்டது

செ.வெ.எண்:. 259 நாள்:. 27.04.11

**பத்திரிக்கைச்செய்தி**

திரு.கே.எஸ்.ஸ்ரீபதி,இ,ஆ,ப (ஓய்வு) தமிழ் நாடு மாநில தலைமைத் தகவல் ஆணையர் அவர்கள் இன்று காலை 11 மணிக்கு தமிழ் நாடு தகவல் ஆணையத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள 'வீடியோ கான்பரன்ஸ்' மூலம் நேரிடையாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மனுதாரர்கள் மற்றும் பொதுத் தகவல் அதிகாரிகளிடம் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் நாகர்கோவில் மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்கள் மீது விசாரணை துவக்கிவைத்தார்கள், உடன் மாநில தகவல் ஆணையர்கள் டாக்டர் ஆர். பெருமாள்சாமி, திரு.டி.சீனுவாசன் மற்றும் டாக்டர் (திருமதி) சாரதா நம்பி ஆருரன் ஆகியோரும் பங்கேற்றனர். இந்த நடைமுறை மிக விரைவாக வழக்குகளை விசாரிக்க ஏதுவாக இருப்பதால் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும், இவ்வசதியினால் மனுதாரர்கள் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் சென்னை வரை வந்து செல்லும் சிரமத்தை குறைப்பதாகவும் அமையும்.

**வெளியீடு, இயக்குநர்**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை.**